ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1710/24 - 2011 ජුනි 17 වැනි සිකුරාදා - 2011.06.17
*1710/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

சீனித்தம்பி பேரின்பராசா எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. நாகமணி கமலநாதன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ்குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. நாகமணி கமலநாதன் என்பவர், கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, யூன் 8.

7- 116/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

நவரெத்தினம் றுவேந்திரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. நாகன் இளையதம்பி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ்குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. நாகன் இளையதம்பி என்பவர்,கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, யூன் 8.

7- 116/2

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், சீனித்தம்பி பேரின்பராசா எனும் துணைத் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவருமான, கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. வடிவேல் சச்சிதானந்தம் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ்குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. வடிவேல் சச்சிதானந்தம் என்பவர்,கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2011, யூன் 8.

7- 117

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.